
Koviloor Digital Library

உ

சிவமயம்

பயன் தரும் பாடல்கள்



சிந்தனைக் கவிஞர் சித.சிதம்பரத்தின்
தொலை நோக்குப் பார்வையில் ...
பாரோர் படித்துப் பயனுற வழங்குவோர்
ப.கு.சித. இல்லம் முத்துப்பட்டிணம், காரைக்குடி.

Acc No 32183
Q14123 3-2

அன்பளிப்பு :

M. குமரப்பன்

M.K. மீனாட்சி

M.R. கருத்தான்

காரைக்குடி

Koviloor Digital Library

திருமகள் வணக்கம்


1. காடுவெட்டிப் போட்டுக் கடிய நிலந்திருத்தி
வீடு கட்டிக் கொண்டிருக்கும் வேள்வணிகர் வீடுகட்கு
அன்றைக்கு வந்த எங்கள் அம்மா, இலக்குமியே
என்றைக்கும் நீங்கா திரு.

2. நீங்காது நின்மகனும் நெடிய திருமாலும்
பாங்காக அன்று வந்த பாற்கடல் போல்-தேங்காமல்
நன்றாக நீ இருந்து நாளும் வளம் பெருகி
என்றைக்கும் நீங்கா திரு.

3. நின்மேலுமாணை நின்மகன் மேலுமாணை நின்மாக் கொழுநன்
தன்மேலுமாணை தமிழ்மேலுமாணை தனவணிகச்
சின்னஞ் சிறுவர் தெரியாத காளையர் என் செயினும்
பின்னும் பொறுத்திருப்பாய் பெரிய இலக்குமியே.

– *பாடுவார்* முத்தப்ப செட்டியார்.

Koviloor Digital Library



திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசகர்

LIBRARY KOVILOOR
I 32183
3-2

Koviloor Digital Library

சிவமயம்

பிள்ளையார் நோன்பு நாமாவளி

வேழமுகம்

வேழ முகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்

வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழ
துள்ளி ஓடும் தொடர்ந்த வினைகளே.

பிள்ளையார் சிந்தனை

சிந்தித்தவர்க்	கருள்	கணபதி	ஜய ஜய
சீரிய	வானைக்	கன்றே	ஜய ஜய
அன்புடை	அமரர்க்கு	ஆப்தாய	ஜய ஜய
ஆவித்	துணையே	கணபதி	ஜய ஜய
இண்டைச்	சடைமுடி	இறைவா	ஜய ஜய
ஈசன்	தந்தருள்	மகனே	ஜய ஜய
உன்னிய	கருமம்	முடிப்பாய்	ஜய ஜய
ஊர்	நவசந்தி	உகந்தாய்	ஜய ஜய
எம்	பெருமானே	இறைவா	ஜய ஜய
ஏழுல	குந்தொழ	நின்றாய்	ஜய ஜய
ஐயா	கணபதி	நம்பியே	ஜய ஜய
ஒற்றை	மருப்புடை	வித்தகா	ஜய ஜய
ஓங்கிய	வானைக்	கன்றே	ஜய ஜய
ஔவிய	மில்லா	அருளே	ஜய ஜய
அக்கர	வஸ்து	ஆனவா	ஜய ஜய
கணபதி	என்வினை	களைவாய்	ஜய ஜய
நப்போல்	மழுவொன்	றேந்தியே	ஜய ஜய
சங்கரன்	மகனே	சதுரா	ஜய ஜய
ஞய	நம்பினற்	பாலாடிய	ஜய ஜய
இடம்பட	விக்கின	விநாயகா	ஜய ஜய

Koviloor Digital Library

இணங்கிய	பிள்ளைகள்	தலைவா	ஜய ஜய
தத்துவ	மறைதெரி	வித்தகா	ஜய ஜய
நன்னெறி	விக்கின	விநாயகா	ஜய ஜய
பள்ளியி	லுறைதரும்	பிள்ளாய்	ஜய ஜய
மன்றுள்	ளாடும்	மணியே	ஜய ஜய
இயங்கிய	ஞானக்	குன்றே	ஜய ஜய
அரவக்	கிண்கிணி	ஆர்ப்பாய்	ஜய ஜய
இலகக்	கொம்பொன்	றேந்தியே	ஜய ஜய
வஞ்சனை	யாவும்	தீர்ப்பாய்	ஜய ஜய
அழகிய	யானைக்	கன்றே	ஜய ஜய
இளமத	யானை	முகத்தாய்	ஜய ஜய
இரகுபதி	விக்கின	விநாயகா	ஜய ஜய
அனந்த	லோடாதி	அடிதொழ	அருளே

****

மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ்

தொடுக்கும் கடவுட் பழம் பாடல்
தொடையின் பயனே நறை பழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகு நறுஞ்
சுவையே அகந்தைக் கிழங்கை யகழ்ந்
தெடுக்கும் தொழும்பர் உளக்கோயில்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமையப்பொறுப்பில் விளையாடும்
இளமென் பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்து நின்ற
ஒருவன் திருவுள்ளத்திலழகு
ஒழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமேமதுகரம் வாய்
மடுக்கும் குழற்கா டேந்து மிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலையத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே

Koviloor Digital Library

நால்வர் துதி

பூழியர் கோன் வெப்பு ஒழித்த புகலியர் கோன் கழல் போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்த பிரான் அடி போற்றி
வாழிதிரு நாவலூர் வன்தொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாத ஊரர் திருத்தாள் போற்றி

****

பொன் உலவாக்கிழி பெற்ற
தேவாரத் திருப்பதிகம்

திருஞான சம்மந்தப் பெருமான் திருவாவடு துறையில் 'இடரினும் தளரினும்' எனும் திருப்பதிகத்தை அருள்மிகு மாசிலாமணிப் பெருமான் முன் பாடி பசும்பொன் ஆயிரம் கொண்ட உலவாக்கிழி பெற்றார் என்பது வரலாறு.

இத்திருப்பதிகத்தை அன்புடன் ஓதுபவர்கள் தங்கள் வாழ்வில் ஏற்படும் துன்பம், மனத்தளர்ச்சி, நோய் முதலியவை நீங்கி நலம் நிறைந்து இன்புறுவதுடன் நிறைந்த செல்வங்களையும் பெறுவர் என்பது உறுதி. வராத கடன் வசூலாகும். கடன் தொல்லை தீரும்.

1. இடரினும் தளரினும் எனது உறுநோய்
தொடரினும் உன்கழல் தொழுது எழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே.
இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

2. வாழினும் சாவினும் வருந்தினும் போய்
வீழினும் உன்கழல் விடுவேன் அல்லேன்
தாழிளம் தடம்புனல் தயங்கு சென்னிப்
போழின மதிவைத்த புண்ணியனே.

Koviloor Digital Library

இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடு துறை அரனே

3. நனவினும் கனவினும் நம்பா உன்னை
மனவினும் வழிபடல் மறவேன் அம்மான்
புனல்விரி நறுங்கொன்றைப்போது அணிந்த
கனல்எரி அனல்புல்கு கையவனே.
இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோஉனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

4. தும்மலோடு அருந்துயர் தோன்றிடினும்
அம்மலர் அடியலால் அரற்றாது என்நா
கைமல்கு வரிசிலைக் கணைஒன்றினால்
மும்மதில் எரிஎழ முனிந்தவனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோஉனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

5. கையது வீழினும் கழிவுறினும்
செய்கழல் அடியலால் சிந்தை செய்யேன்
கொய்யணி நறுமலர் குலாய சென்னி
மையணி மிடறுடை மறையவனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோஉனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

6. வெந்துயர் தோன்றிஓர் வெருவுறினும்
எந்தாய் உன்அடியலால் ஏத்தாது என்நா
ஐந்தலை அரவுகொண்டு அரைக் கசைத்த
சந்தவெண் பொடி அணி சங்கரனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோஉனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

Koviloor Digital Library

7. வெப்பொடு விரவி ஓர்வினைவரினும்
அப்பாஉன் அடியலால் அரற்றாது என்நா
ஒப்புடை ஒருவனை உரு அழிய
அப்படி அழஎழ விழித்தவனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோஉனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

8. பேரிடர் பெருகி ஓர் பிணி வரினும்
சீருடைக் கழல்அலாற் சிந்தை செய்யேன்
ஏருடை மணிமுடி இராவணனை
ஆரிடர் படவரை அடர்த்தவனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோஉனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

9. உண்ணினும் பசிப்பினும் உறங்கினும் நின்
ஒண்மலர் அடியலால் உரையாது என்நா
கண்ணனும் கடிகமழ் தாமரை மேல்
அண்ணலும் அளப்பரி தாயவனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோஉனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

10 பித்தொடு மயங்கி ஓர் பிணிவரினும்
அத்தாஉன் அடியலால் அரற்றாது என்நா
புத்தரும் சமணரும் புறன் உரைக்கப்
பத்தர்கட்கு அருள்செய்து பயின்றவனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோஉனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

11. அலை புனல்ஆவடு துறை அமர்ந்த
இலைநுனி வேற்படை எம் இறையை

Koviloor Digital Library

நலம்மிகு ஞானசம் பந்தன் சொன்ன
விலையுடைஅருந்தமிழ் மாலை அல்லால்
வினையாயின நீங்கிப்போய் விண்ணவர் வியன்உலகம்
நிலையாக முன்னேருவர் நிலமிசை நிலையிலரே

****

கோளறு பதிகம்

(நவக்கிரகங்களால் துன்பம் ஏற்பட்டு வருந்துவோர் இப்பதிகத்தை தூய்மையான மனத்துடன் பக்தியாக தோத்தரித்தால் நவக்கிரகத் துன்பம் நீங்கி, நன்மை பெறுவது திண்ணம். கோள்களால் தீமை ஏற்படாது).

1. வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி
சனிப்பாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

2. என்பொடு கொம்பொ டாமை இவைமார்பிலங்க
எருதேறி ஏழையுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்து என்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொ டேழு பதினெட்டோடாறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

3. உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்த்தி செயமாதுபூமி

Koviloor Digital Library

திசை தெய்வ மான பலவும்
அருநெறி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

4. மதிநுதல் மங்கையோடு வடவாலி ருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடு நோய்க ளான பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

5. நஞ்சணி கண்டன் எந்தை மடவாள் தனோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுண ரோடும் உருமிடியும் மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

6. வாள்வரி யதளதாடை வரிகோ வணத்தர்
மடவாள் தனோடும் உடனாய்
நாள்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

7. செப்பிள முலைநன்மங்கை யொரு பாகமாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமே லணிந்தென்

Koviloor Digital Library
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

8. வேள்பட விழிசெய்தன்று விடைமே லிருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன்ற னோடும்
இடரான வந்து நரியா
ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

9. பலபல வேடமாகும் பரன்நாரி பாகன்
பசுஏறும் எங்கள் பரமன்
சலமக ளோடெருக்கும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனுமாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேரு நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

10. கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியு நாகம் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரோடு அமணைவாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

Koviloor Digital Library

11. தேனமர் பொழில் கொளாலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம் பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறை ஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆன சொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசால்வர் ஆணை நமதே.

****

பஞ்சாக்கரத் திருப்பதிகம்

(இத் திருப்பதிகத்தை பக்தியுடன் படித்தால் இதயநோய், இரத்த அழுத்தம் போன்ற நோய்கள் குணமாகும்)

1. துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்சவு தைத்தன அஞ்செழுத்துமே.

2. மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மையாள் வன
செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே.

3. ஊனிலு யிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞானவி ளக்கினை யேற்றி நன்புலத்
தேனை வழிதிறந் தேத்து வார்கிடர்
ஆனகெடுப்பன அஞ்செழுத்துமே.

4. நல்லவர் தீய ரெனாது நச்சினர்
கெல்லல்கெடச்சிவ முத்தி காட்டுவ
கொல்லா மன்தமர் கொண்டு போமிடத்
தல்லல்கெ டுப்பன அஞ்செழுத்துமே.

Koviloor Digital Library

5. கொங்கலர் வன்மதன் வாளி யைந்தகத்
தங்குள பூதமும் அஞ்சவைம் பொழில்
தங்கர வின்படம் அஞ்சத் தம்முடை
அங்கையில் ஐவிரல் அஞ்செழுத்துமே.

6. தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த்தெய்தும் போழ்தினும்
அம்மையினுந்துணை அஞ்செழுத்துமே.


7. வீடு பிறப்பை யறுத்து மெச்சினர்
பீடைகெ டுப்பன பிள்ளை நாடொறும்
மாடு கொடுப்பன மன்னுமா நடம்
ஆடியு கப்பன அஞ்செழுத்துமே.

8. வண்டம ரோதி மடந்தை பேணின
பண்டையி ராவணன் பாடி யுய்ந்தன
தொண்டர்கள்கொண்டு துதித்த பின்னவர்க்
கண்டம் அளிப்பன அஞ்செழுத்துமே.

9. கார்வணன் நான்முகன் காணுதற்கொணாச்
சீர்வணச் சேவடி செவ்வி நாடொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும பித்தர்கட்
கார்வண மாவன அஞ்செழுத்துமே.

10. புத்தர்ச மண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வினைப் பகைக்
கத்திர மாவன அஞ்செழுத்துமே.

11. நற்றமிழ் ஞானசம் பந்தன் நான்மறை
கற்றவன் காழியா மன்னவன் உன்னிய
அற்றமிழ் மாலையீ ரைந்தும் அஞ்செழுத்
துற்றன வல்லவர் உம்பராவரே.



Koviloor Digital Library

திருப்பாச்சிலாச்சிராமம்

திருச்சிற்றம்பலம்.

(உடல்வலி, வேதனை, நரம்பு சம்பந்தமான உபாதைகள், வாதநோய்கள், உடல் தளர்ச்சி, மூட்டுவலி முதலிய நோய்கள் அகல இப்பதிகத்தை பக்தியுடன் படிக்க வேண்டும்.)

1. துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச்
சுடர்ச்சடை சுற்றிமு டித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடஞ் சூழ
வாரிட மும்பலி தேர்வர்
அணிவளர்கோல்மெ லாஞ்செய்து பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை வாட
மயல்செய்வ தோஇவர் மாண்பே.

2. கலைபுனை மானுரி தோலுடை யாடை
கனல்சுட ராலிவர் கண்கள்
தலையணி சென்னியர் தாரணி மார்பர்
தம்மடி கள்ளிவ ரென்ன
அலைபுனல் பூம்பொழில் சூழ்ந்தமர் பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
இலைபுனை வேலரோ ஏழையை வாட
இடர்செய்வ தோஇவ ரீடே.

3. வெஞ்சுட ராடுவர் துஞ்சிருள் மாலை
வேண்டுவர் பூண்பது வெண்ணூல்
நஞ்சடை கண்டர் நெஞ்சிட மாக
நண்ணுவர் நம்மை நயந்து
மஞ்சடை மாளிகை சூழ்தரு பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
செஞ்சுடர் வண்ணரோ பைந்தொடி வாடச்
சிதை செய்வதோ இவர் சீரே.

Koviloor Digital Library

4. கனமலர்க் கொன்றை அலங்கல்இ லங்கக்
கனல் தரு தூமதி கண்ணி
புனமலர் மாலை யணிந்தழ காய
புநிதர்கொ லாமிவ ரென்ன
வனமலி வண்பொழில் சூழ்தரு பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
மனமலி மைந்தரோ மங்கையை வாட
மயல்செய்வ தோஇவர் மாண்பே.

5. மாந்தர்தம் பால்நறு நெய்மகிழ்ந் தாடி
வளர்சடை மேற்புனல் வைத்து
மோந்தை முழாக்குழல் தாளமொர் வீணை
முதிரவோர் வாய் மூரி பாடி
ஆந்தைவி ழிச்சிறு பூதத்தர் பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
சாந்தணி மார்பரோ தையலை வாடச்
சதுர்செய்வ தோஇவர் சார்வே.

6. நீறுமெய் பூசி நிறைசடை தாழ
நெற்றிக்கண் ணாலுற்று நோக்கி
ஆறது சூடி ஆடர வாட்டி
யைவிரற் கோவண ஆடை
பாறரு மேனியர் பூதத்தர் பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
ஏறது ஏறியர் ஏழையை வாட
இடர்செய்வ தோஇவ ரீடே.

7. பொங்கிள நாகமொ ரேகவ டத்தோ
டாமைவெண் ணூல்புனை கொன்றை
கொங்கிள மாலை புனைந்தழ காய
குழகர்கொ லாமிவ ரென்ன
அங்கிள மங்கையோர் பங்கினர் பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
சங்கொளி வண்ணரோ தாழ்குழல் வாடச்
சதிர்செய்வ தோ இவர் சார்வே.

Koviloor Digital Library

8. ஏவலத் தால்விச யற்கருள் செய்து
இராவணனை யீடழித்து
மூவரிலும் முதலாய் கருவாய
மூர்த்தியை யன்றி மொழியாள்
யாவர்க ளும்பர வும்மெழிற் பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
தேவர்கள் தேவரோ சேயிழை வாடச்
சிதைசெய்வ தோஇவர் சேர்வே.

9. மேலது நான்முகன் எய்திய தில்லை
கீழது சேவடி தன்னை
நீலது வண்ணனும் எய்திய தில்லை
யென இவர் நின்றது மல்லால்
ஆலது மாமதி தோய்பொழிற் பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
பாலது வண்ணரோ பைந்தொடி வாடப்
பழிசெய்வ தோஇவர் பண்பே.

10. நாணொடு கூடிய சாயின ரேனும்
நகுவ ரவரிரு போதும்
ஊனொடு கூடிய வுட்கு நகையால்
உரைக ளவைகொள வேண்டா
ஆணொடு பெண்வடி வாயினர் பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
பூண்நெடு மார்பரோ பூங்கொடி வாடப்
புனைசெய்வ தோஇவர் பொற்பே.

11. அகமலி அன்பொடு தொண்டர் வணங்க
ஆச்சிரா மத்துறை கின்ற
புகைமலி மாலை புனைந்தழ காய
புனிதர்கொ லாமிவ ரென்ன
நகைமலி தண்பொழில் சூழ்தரு காழி
நற்றமிழ் ஞானசம் பந்தன்
நகைமலி தண்டமிழ் கொண்டிவை யேத்தச்
சாரகி லாவினை தானே.

Koviloor Digital Library

திருமருகல்

திருச்சிற்றம்பலம்.

(பாம்பு கடித்து இறந்த மணமகனை உயிர் எழுப்பி திருமணம் செய்து வைத்தார் திருஞானசம்பந்தர். இப்பாடல்களை பக்தியுடன் படித்தால் திருமருகல் ஈசன் அருளால் திருமணம் இனிதே நடைபெறும்)

1. சடையா யெனுமால் சரணீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோவி வளுன் மெலிவே

2. சிந்தா யெனுமால் சிவனே யெனுமால்
முந்தா யெனுமால் முதல்வா வெனுமால்
கொந்தார் குவளை குலவும் மருகல்
எந்தாய் தகுமோ விவளே சறவே.

3. அறையார் கழலும் மழல்வா யரவும்
பிறையார் சடையும் முடையாய் பெரிய
மறையார் மருகன் மகிழ்வா யிவளை
இறையார் வளை கொண்டெழில் வல் வினையே.

4. ஒலிநீர் சடையிற் கரந்தா யுலகம்
பலிநீ திரிவாய் பழியிற் புகழாய்
மலிநீர் மருகன் மகிழ்வா யிவளை
மெலி நீர்மை யளாக்கவும் வேண்டினையோ.

5. துணிநீல வண்ணம் முகிலோன்றி யன்ன
மணிநீல கண்டம் முடையாய் மருகல்
கணி நீல வண்டார் குழலாளி வடன்
அணிநீல வொண் கண்ணயர் வாக்கினையே.

Koviloor Digital Library

32183

6. பலரும் பரவப் படுவாய் சடைமேல்
மலரும் பிறையொன்றுடையாய் மருகல்
புலருந் தனையுந் துயிலாள் புடை போந்
தலரும் படுமோ வடியாளிவளே.

7. வழுவாள் பெருமாள் கழல் வாழ்க வெனா
எழுவா ணினை வாளிரவும் பகலும்
மழுவாளுடையாய் மருகற் பெருமான்
தொழுவாளி வளைத் துயராக்கினையே.

8. இலங்கைக் கிறைவன் விலங்கல் லெடுப்பத்
துலங்கல் விரலூன்றலுந் தோன்றலனாய்
வலங்கொண் மதின்சூழ் மருகற்பெருமான்
அலங்கல்லி வளையல ராக்கினையே.

9. எரியார் சடையும்மடியும் மிருவர்
தெரியாத தொர்தீர் திரளா யவளே
மரியார் பிரியா மருகற் பெருமான்
அரியாளி வளையயர் வாக்கினையே.

10. அறிவில் சமணும் மலர் சாக்கியரும்
நெறியல்லன செய்தனர் நின்றுழல்வார்
மறியேந்துகையாய் மருகற் பெருமான்
நெறியார் குழலி நிறை நீக்கினையே.

11. வயன்ஞான மல்லார் மருகற் பெருமான்
உயர் ஞானமுணர்ந்தடியுள் குதலால்
இயன்ஞான சம்பந்தன் பாடல் வல்லார்
வியன்ஞான மெல்லாம் விளங்கும் புகழே.



Koviloor Digital Library

ஸ்ரீ தாயுமானவர் சுலோகம்

ஹே, சங்கர . ஸம்ரஹர / பிரமதாதிநாத
மன்னாத / ஸாம்ப / சசிசூட / ஹர / திரிசூலின்
சம்போ / ஸுகப்பிரசவக்கருதபவ / மே தயாளோ
ஸ்ரீமாத்ருபூத / சிவ / பாலய / மாம் நமஸ்தே.

(மேற்படி சுலோகத்தை கர்ப்பிணிகள் தினம் மூன்று முறை சொல்லி நமஸ்காரம் செய்து வந்தால் ஸ்ரீ மட்டுவார் குழலி அம்மை உடனுறை ஸ்ரீ தாயுமானவர் கிருபையால் சுகப்பிரசவமாகி நலம் பெறுவர். பிரசவமான பிறகு முடிந்தவர்கள் ஸ்ரீ தாயுமான சுவாமிக்கு தாரோடு பழமும் (*வாழை*) செம்போடு (*பசும்*) பாலும் அர்ப்பணம் செய்வது மிகவும் விசேஷமாகும்.)

முருகன் வழிபாடு

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே!

- கந்தர் அனுபூதி

(இப்பாடலில் 51 மூல மந்திர அட்சரங்கள் அடங்கியுள்ளன. எல்லாவிதமான கஷ்டங்களையும் நோய்களையும் தீர்க்கவல்லது).

Koviloor Digital Library

திருநீறு பூசும் போது

1. மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்திரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன்திரு ஆலவாயன்
திரு நீறே.

2. வந்தவினையும் வருகின்ற வல்வினையும்
கந்தனென்று சொல்லக் கலங்கிடுமே-தென்பழனி
சேவகா என்று திருநீறு அணிவார்க்கு
மேவ வாராதே வினை.

உலகெலாம் வாழ்க !

ரவி அச்சகம், காரைக்குடி. போன்: 38474